**தலைப்பு 212 – இலங்கை பரீட்சைகள் திணைக்களம்**

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 212 – இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 154(6) அறிக்கையின் 1.6.1(ஆ)(i) | காணி கையேற்றல் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். | 3.3 |
| 154(6) அறிக்கையின் 1.6.1(ஆ)(ii) | காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும். | 1.6.1(அ)(i) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2020 யூன் | எம்பிலிப்பிட்டிய பல்லேகம காணி 2024 ஆம் | திணைக்களத்திற்கு |

| | | |
|---|---|---|
| மாதத்திலும் மற்றும் 2021 ஏப்ரல் மாதத்திலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட முறையே எம்பிலிப்பிட்டிய பல்லேகமவில் அமைந்துள்ள 0.0960 ஹெக்ரேயர் காணி மற்றும் கொத்மலை பகுதிக்குரிய ரிவசயிட் தோட்ட விடுதி மற்றும் மேலுமொரு கட்டிடத்தை உள்ளடக்கிய 0.328 ஹெக்ரேயர் காணி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றிலேனும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதுடன் ரிவசைட் தோட்ட விடுதி மற்றும் மேலுமொரு கட்டிடம் என்பவற்றை கையளித்ததாக கடிதம் கிடைத்த பின்னர் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையளிக்கப்படுகின்ற காணிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ii) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வியக்குர வீடமைப்புத் தொகுதியின் 03 உத்தியோகபூர்வ இல்லங்கள் ரூபா 34,700,936 பெறுமதியில் பரீட்சைத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாச் சொத்தக்கள் கூற்றில் உரிய சொத்தின் பெறுமதி ரூபா 2,045,186 ஆக குறிப்பிடப்பட்டமையின் காரணமாக ரூபா 32,655,750 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அகற்றப்படுகின்ற கடதாசி விற்பனையால் 2020 ஆம் ஆண்டு முதல் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையிலிருந்து திணைக்களத்திற்குக் கிடைக்கவேண்டிய ரூபா 10,870,520 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அறவிடுவதற்காக கோரிக்கை விடப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படும் போது தேவைகளை இனங்கண்டு குறித்துரைத்த திட்டம் ஒன்றின் கீழ் மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக 15 செலவின விடயங்களுக்காக 20 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையிலான வீச்சில் ரூபா 4,190,427,486 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 03 செலவின விடயங்களின் சேமிப்பு 99 சதவீதம் மற்றும் 100 சதவீதம் பெறுமதியைக் கொண்டிருந்தது. | எதிர்பார்த்த வகையில் உரிய செலவினங்கள் ஏற்படாமை மற்றும் 2023 ஆம் ஆண்டில் பரீட்சை கால அட்டவணை திருத்தப்பட்டதன் அடிப்படையில் பரீட்சைகளுக்காக செலவாகின்ற நேர் மற்றும் மறைமுக செலவினங்கள் யாவற்றிலும் குறைவு ஏற்பட்டிருந்தது. | சரியான ஆய்வுடன் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் ஆறு மாடிகளை உடைய நிர்மாணத்திற்காக நிர்மாணக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,367,686 தொகை பொறுப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | தவறினால் உள்ளடக்கப்படவில்லை. | சகல பொறுப்புக்களும் முறையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | - | களஞ்சியத்திலிருந்து பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளைக்கு விநியோகிக்கப்பட்ட குரல் | விசாரணைகள் மேற்கொண்டு இறுதி அறிக்கை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பதிவு இயந்திரங்கள் 07 மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்ட குரல் பதிவு இயந்திரங்கள் 16 என்பன தொலைந்து போயிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | - | 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 ஏப்ரல் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இரகசியமாக அச்சிடலின் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தாமதமடைந்தமையின் காரணமாக மெய்மையாய்வு சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய பொருள் மெய்மையாய்வு குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 751 | - | 2022 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 08 களஞ்சியங்களில் 45 பொருள் விடயங்களில் 209 அலகுகள் மிகை மற்றும் 10 களஞ்சியங்களில் 102 பொருள் விடயங்களில் 622 அலகுகள் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த பற்றாக்குறையில் அதிக பகுதி 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டதுடன் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2011 ஆம் ஆண்டின் போது கல்விப் பொதுத் தரா தர (உயர்தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இரட்டைக்குழு முன்மொழிவின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2019 பெப்ரவரி 02 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு குறித்துரைத்த ஆறுமாடி கட்டிடம் பல்நோக்கு பணிக்கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 564,320,835 ஒப்பந்தத் தொகையில் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 05 வருடங்களுக்கு அண்மித்த கால தாமதம் ஏற்பட்டிருக்கும் போது நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 92 சதவீதம் அளவாக இருந்ததுடன் இந்த நிர்மாணங்களுக்காக அத்திகதியில் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துக்கு ரூபா 81,729,560 தொகையும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 369,555,925 தொகை ஆக ரூபா 451,285,486 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் காணப்பட்ட மோசமான காலநிலை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை, நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக நிர்மாணங்கள் தாமதமடைந்திருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்யதல் வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் செயலாற்றல் அறிக்கை தயாரித்து மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 630,000,000 பெறுமதியுடைய திணைக்களத்தின் பிரதான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பத்தரமுல்லையில் அமைந்துள்ள 1.356 ஹெக்ரேயர் காணியின் சட்டரீதியான உரித்து இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் தீர்மாணத்தின் பிரகாரம் கட்டணம் செலுத்தப்படாமல் காணி கையேற்பதற்காக 2024 மார்ச் 06 ஆந் திகதிய கல்வி அமைச்சின் செயலாளருக்கு புதிய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காணி கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள், பிணை வைக்க வேண்டி அளவு, திட்டத்தை தீர்மாணித்தல் போன்ற பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளருக்கு முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக இதுவரை அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய குழுவொன்று நியமித்து விரைவாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்காக டிஜிட்டல் அச்சிடல் அலகிற்குரிய 04 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் இரகசியமாக அச்சிடலுக்கு உரிய 06 அச்சிடல் இயந்திரங்கள் பயன்படுத்தி 78,680,276 வினாப்பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்தது. அந்த வினாப்பத்திரங்களக்கிடையே அந்த இயந்திரங்களுக்கிடையே 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 546,264,452 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இணையதள டிஜிட்டல் பிரின்டர் இயந்திரம் பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டின் போது 13,395,680 வினாப்பத்திரங்கள் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்ததுடன் அந்த அச்சிடல் மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த வினாப்பத்திரங்களின் அச்சிடல் அளவில் 17 சதவீதமாகும். இயந்திரத்தை பழுது பார்க்கும் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,388,311 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | ஏதாவது தொழில்நுட்ப பிரச்சனை காரணமாக இயந்திரத்தில் ஆகக்கூடிய இயலளவில் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2023.08.28 ஆந் திகதி வரையும் பிரச்சினைகளைத் தீர்த்து கல்வி க.பொ.த(உயர்தரம்) 2023(2024) பரீட்சை வினாப்பத்திரங்களின் எண்ணிக்கை 26.59 சதவீதம் அச்சிடப்பட்டுள்ளது. | தேவைகளை சரியாக இனங்கண்டு சொத்துக்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன். கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் ஆகக்கூடிய இயலளவில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | வினாப்பத்திரங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 8,428,637 பெறுமதியில் வெப் டிஜிட்டல் அச்சிடல் இயந்திரத்தின் Wrapping Solution பகுதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இரகசிய குறியீட்டு பொதியிடல் | அந்த பகுதி இரகசிய பாடசாலை பரீட்சைகள் கிளையின் தேவையுடன் இணங்காமையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய எந்தவொரு கிளைக்கும் அதன் தேவை காணப்படாததாக | உரிய இயந்திரத்தின் பகுதிகளை கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்டதிலிருந்து கொள்வனவு செய்யும் வரையான செயற்பாடுகள் தொடர்பாக சகல |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளுடன் அந்த பகுதி இணங்காமையின் காரணமாக 2024 யூலை வரையும் அந்த இயந்திரத்தின் பகுதி பயனற்றுக் காணப்பட்டது. | அறிவிக்கப்பட்டிருந்தமையினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுகின்றது. | பொறுப்புக்களையும் உடைய தரப்பினரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Stitch Master Gathering and wire Stitching machine இயந்திரம் செயற்படுத்தும் போது தாள் விழுந்ததன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் உரிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய வழங்குனர் கம்பனியிடம் விசாரணை செய்து இயந்திரத்தின் தேவையின் பிரகாரம் செயல்நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இயந்திரத்தைக் கையேற்கும் போது அதன் செயற்படு நிலையினை பரீட்சித்து திணைக்களத்தின் தேவைக்கு ஈடுகொடுக்காதவிடத்து இயந்திரத்தை மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினரையும் இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் மீளாய்வாண்டில் நடாத்திச் செல்லப்பட்ட நிறுவன பரீட்சைகளுக்காக 17 அரசாங்க நிறுவனங்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 413,741,500 தொகை 2024 | உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு போதியளவான வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை மாதம் வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குதல், பதவி உயர்வு வழங்குதல் மற்றும் ஓய்வு பெறச்செய்வதற்காக பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற கா.பொ.த(சா.தரம்) மற்றும் கா.பொ.த(உ.தரம்) பரீட்சைகளின் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதது தேவையாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுபேறுகளை உறுதிப்படுத்த வேண்டிய அளவு 8,000 அளவாக இருந்தது. | அச்சிடல் இயந்திரங்களின் காலம் பழைமையடைந்தமையினால் தொடர்ச்சியாக அடிக்கடி செயலிழந்த நிலைக்கு உட்படுகின்றது. பெறுபேறுகளை உறுதிப்படுத்துதலை விரைவுபடுத்துவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. | பரீட்சை பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் திட்டமுறைமையொன்றை முறையாகவும் விரைவாகவும் வேலைத்திட்டமொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28,500,000 செலவில் திணைக்களத்தால் கிலோவோல்ட் 250 சூரிய வலு சக்தி முறைமையொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் முறைமை ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு வருட காலமாக அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் வழங்கவேண்டியிருந்த போதும் நிறுத்தி வைத்த பணம் 10 சதவீதம் விடுவிப்பதற்கு முன்னர் வழங்குனரால் பராமரிப்பு சேவை வழங்குதல் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடவேண்டியிருந்தமை கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2018 யூலை 12 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்திற்குரிய சகல பணமும் செலுத்தி முடிவடைந்திருந்ததுடன் இதுவரையில் சேவை வழங்கிய நிறுவனத்துடன் | புதிய சேவை உடன்படிக்கை சமர்ப்பிக்குமாறு Ginso நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது கிடைத்த பின்னர் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்ததுடன் பராமரிப்பு நிறுவனத்துடன் கலந்துரையாடி சேவை நடவடிக்கைகளை மிகவும் விரைவாக மேற்கொண்டு இயலளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சூரிய வலு சக்தி முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | 1990 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் பரீட்சை பெறுபேறுகள் பதிவேடு பொதுமக்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தின் போது விநியோகிப்பதற்கு வசதியான வகையில் அந்தப்பெறுபேறுகள் பதிவேடு ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு உபயோகிக்கக்கூடிய வகையில் மின்பொருளில் வடிவமைக்கும் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2000 ஆண்டுக்கு முன்னர் பெறுபேறு பதிவேடுகளைப் பாதுகாத்தல், மூலப்பிரதிகளை ஸ்கான் செய்தல், பெறுபேறு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ் பத்திரம் / உறுதிப்படுத்தல் கடிதம் அச்சிடப்பட்ட பிரதிகளாகப் பெற்றுக்கொள்ளுதல், பரீட்சை இலக்கம் மற்றும் ஆண்டில் உள்ளடக்கப்பட்டு பரீட்சை பெறுபேறுகள் சரியாக வைத்துக்கொள்வதற்கு முடியுமான வகையில் தரவு முறைமையொன்றைத் தயாரித்தல், கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையை பரீட்சை சான்றிதழ் பத்திரத்தில் அடங்கியுள்ள சகல | 2018 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனத்திற்கு ஆரம்பிக்கப்பட்ட கட்டத்தில் கையளிக்கப்பட்ட 5000 ஆவணங்களின் தெரிவாக எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரியை அடைந்து கொள்ளும் வகையில் நிறைவேற்றாமையின் காரணமாக அந்த கம்பனியின் கட்டளைக் கடிதம் இரத்து செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பழைய மற்றும் புதிய ஆவணங்களை பாதுகாப்பதற்குரிய திட்ட முறைமையின் தாமதமின்றும் முறையாகவும் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விபரங்களையும் உள்ளடக்குதல் மற்றும் அந்த தகவல் தரவு முறைமையொன்றாக பேணிச்செல்லல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (உ) | திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் இலத்திரணியல் சேவைகளுக்குரிய சேவை உடன்படிக்கை 2021 நவம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் இணையதளத்தை நாளதுவரையாக்குவதற்கு முடியாமையினால் இணையதளம் மற்றும் இலத்தரணியல் சேவைகள் பாதுகாப்பின்றி இருந்தது. | பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக புதிய நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இணையதளம் மற்றும் இலத்திரனியல் சேவைகளை பாதுகாப்பாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | AS/400 கணனி முறைமை IBM Power 9 வரை நாளதுவரையாக்கும் செயற்பாடுகளுக்காக திணைக்களத்தால் ரூபா 184,689,755 கிரயம் ஒன்று 2021 திசெம்பர் மாதத்தின் போது அறவிடப்பட்டிருந்தது. நான்காவது வருடத்திற்குரிய சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை 2024 யூன் 14 ஆந் திகதியில் முடிவடைகின்ற போதும் ரூபா 19,069,527 ஆன நிதியேற்பாடு கிடைக்காமையின் காரணமாக சேவை உடன்படிக்கையை நீடிப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே இந்த கணனி முறைமையின் ஆயட்காலம் 05 வருடங்களாக இருந்த போதிலும் நாளதுவரையாக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கிரய | கிரய நலன் பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் கோரிக்கை எழுந்திருக்கவில்லை. | அரச நிதியினை செலவிடுவதற்கு முன் கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நலன் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஏ) | அவ்வாறே முன்னர் பயன்படுத்திய பழைய AS400 IBM Power 6 கணனி முறைமையை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன் தரவுகளை அழிப்பதற்காக தேவையான நிபுனத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | AS400 IBM Power 6 கணனி முறைமையின் தரவுகளை சரியாக புதிய முறைமையில் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தி பழைய முறைமையின் தரவுகளை அழித்தலை மேற்கொண்டு விரைவாக அகற்றுதல் வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டிற்குரிய 05 ஆம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த(சா.தரம்) மற்றும் க.பொ.த(உ.தரம்) பரீட்சைகளில் முறையே 2023 ஒக்டோபர் 15, 2023 மே 29 முதல் 2023 யூன் 08 வரை மற்றும் 2023 சனவரி 23 முதல் 2023 பெப்ரவரி 17 வரை நடாத்தப்பட்டிருந்தது. அந்த பரீட்சைகளை மீண்டும் மீளாய்வு செய்து பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு பெறுபேறுகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து முறையே 03 மாதம், 05 மாதம் மற்றும் 02 மாதங்கள் கடந்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட முறையில் அல்லாமல் உரிய பிரகாரம் மீளாய்வு செய்து பெறுபேறுகளை விரைவாக விநியோகித்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவை தேவை அதிகளவாக காணப்படுகின்ற கணனி பிரிவின் மூலம் நிகழ்ச்சித் திட்டம் வழங்கல் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை விநியோகித்தல் அங்கீகரிக்கப்பட்ட தகவல்கள் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 20 பேராக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 09 பேர்கள் ஆனமையால் வெற்றிடங்கள் 11 ஆகக் காணப்பட்டது. | இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப சேவையின் 2 ஆம் வகுப்பின் II தரத்தில் ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப்பரீட்சை 2021(2024) இல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அத்தியாவசிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்குரிய கணனி மயப்படுத்தப்பட்ட தரவுகளை உள்ளடக்குதல், அதற்காக தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல், விண்ணப்பதாரர்களின் புள்ளிகளை பதிவிடலை உள்ளடக்கிய கடமைகளை மேற்கொள்கின்ற அங்கீகரிக்ப்பட்ட பரீட்சை தரவு உதவி பதவியணியினர் 49 பேர்களாக இருந்த போதும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 07 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 42 ஆகக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்காக தேவையான வினாப்பத்திர வழிகாட்டி மற்றும் அதற்குத் தேவையான படிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய திணைக்கள நிர்வாக நடவடிக்கைகளை பேணிச்செல்வதற்கு தேவையான காகிதாதிகள், அவசர தேவை கோரிக்கையின் அடிப்படையில் கல்வியமைச்சிற்காக தேவையான ஆவணங்களை அச்சிடும் பணிகள் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அச்சிடலில் வெற்றிடங்கள் 29 ஆக காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |